## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
## அருப்புக்கோட்டை

### அசல் வழக்கு எண். 283 /2015

வாதிகள் தரப்பு 1 ஆவது சாட்சியின் வாக்குமூலம் (1873 ம் ஆண்டு சாட்சிய சட்டம் 44 வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.குமரவடிவேலன், Junior Assistant என்பவரால் ஆணையிட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

---

| | | |
|---|---|---|
| பெயர் சுந்தரராஜ் | வா.சா.–1 | சாதி |
| த/பெ. | | மதம் |
| கிராமம் | | தொழில் |
| தாலுகா | | வயது |

---

முதல் விசாரணை 07–07–2025.

நான் இந்த வழக்கின் 2 ம்வாதியாவேன். நான் எனக்காகவும் 1 ம் வாதி சீனிவாசனுக்காகவும் மற்றும் பந்தல்குடி கிராமம் லிங்காபுரம் தெருவில் வசிக்கும் 24 மனை தெலுங்கு செட்டியார் ஜாதியை சேர்ந்த விவசாய மக்களின் பிரதிநிதிகள் ஸ்தானத்திலும் வாதிகள் தரப்பு 1 வது சாட்சி எங்கள் தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். படித்துப் பார்த்து விவரங்களைத் தெரிந்துகொண்டுதான் கையொப்பம் செய்தேன்.

1. 29.05.1948 ம் தேதியிட்ட சுப்பம்மாள் கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1
2. 06.07.1949 ம் தேதியிட்ட கொப்புலு செட்டியார் மற்றும் நான்கு பேர்கள் கந்தன்செட்டியார் வகையறாவிடமிருந்து கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2.
3. 07.06.1949 ம் தேதியிட்ட குருவம்மாளுக்கு சின்ன அய்யணன் வகையறா எழுதிகொடுத்த அடமானப் பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3.
4. 23.09.1952 ம் தேதியிட்ட வெங்கடசாமிநாயக்கருக்கு

அய்யணன் செட்டியார் வகையறா எழுதிகொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4.

5. 21.07.1994ம் தேதியிட்ட குருசாமிக்கு சின்ன சோலையம்மாள் என்ற செல்லத்தாய் வகையறா எழுதிகொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5.

6. 20.01.2006 தேதியிட்ட 1ம் வாதி பெயரில் உள்ள பட்டா. பட்டா எண்.406 இணையதள நகல் வா.சா.ஆ.6.

7. 20.01.2006 தேதியிட்ட என்னுடைய பெயரிலுள்ள பட்டா. பட்டா எண்.2652 இணையதள நகல் வா.சா.ஆ.7.

8. 24.11.2015 தேதியிட்ட அசல் வழக்கு எண்.263/2015 வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8.

9. தாவா சொத்தின் நிலையை காட்டக்கூடிய புகைபடங்கள் எண்ணம் 26 குறுந்தகடுகள் வா.சா.ஆ.9.

ஆவணங்கள் குறியீடு செய்யும் வகைக்காக வாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

ANANTHAVALLI S

Digitally signed by ANANTHAVALLI S